1982 பிப்ரவரி 2]

கப்பலூரில் உபமின்நிலையம் நிறுவும் திட்டம்.

*வினா எண் 2—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருமங்கலம் அருகே கப்பலூரில் மின்சார உபநிலையம் Sub-Station துவங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) அண்ட் (ஆ) : தென் மதுரையிலும் திருமங்கலம் வட்டாரங்களிலும் உள்ள பசுமலை, திருமங்கலம், கப்பலூர் மற்றும் செக்கானூரணி ஆகிய இடங்களை இணைத்து கப்பலூரில் 110 கி.வா. உப மின் நிலையம் ஒன்று நிறுவ ஊரக மின் கழகம் (R.E.C.) திட்டம் சீர்ப்படுத்தல் பிரிவின் கீழ் பிப்ரவரி 1981-ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதற்காக ஊரக மின் கழகம் ரூபாய் 58·743 லட்சம் கடன் வழங்கியுள்ளது.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, மின் உற்பத்தி செய்வதற்குத் தனியார் யாருக்காவது லைசன்சு கொடுக்கப்பட்டு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை)

[முற்பகல் 10–30]

திருவில்லிபுத்தூர் யூனியனில் பட்டு நூற்பு தொழிற் கூட்டுறவு சங்கம் அமைக்கும் திட்டம்.

*வினா எண் 3—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருவில்லிபுத்தூர் யூனியனில் பட்டு நூற்பு தொழிற் கூட்டுறவுச்சங்கம் ஆரம்பிக்க விவசாயிகளிடம் இருந்து கோரிக்கை மனு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எந்த அளவில் உள்ளது?

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) ஆம்.

(ஆ) திருவில்லிபுத்தூர் பட்டு விவசாயிகள் மற்றும் பட்டு நூற்பு தொழிற் கூட்டுறவு சங்கம் 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 2 ஆம் நாள் அன்று பதிவு செய்யப்பட்டு 1981-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 6 ஆம் நாள் முதல் அங்கு செயல்பட்டு வருகிறது.

TRUTH ALONE TRIUMPHS